[1987 ஏப்ரல் 4

விளாத்திகுளம் தொகுதி அரியநாயகிபுரத்தில் பாசனக் குளம் அமைத்தல்.

297—(*வினா எண் 7856) திரு. ச. குமாரகுருபர ராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள அரியநாயகிபுரம் கிராமத்தில் பாசனக்குளம் அமைப்பதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, துறையின் ஆய்வில் உள்ளது.

திரு. ச. குமரகுருபர ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் உள்ள அரியநாயகிபுரம் கிராமத்தில் பாசனக் குளம் அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் நடைபெறுவதாக அறிகிறேன். எனவே இந்த நிலையில், அரியநாயகிபுரம் கிராமத்தில் பாசனக்குளம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது துறையினுடைய ஆய்வில் இருந்து கொண்டு இருக்கிறது. மிக வேகமாக எடுத்து, வேலைகள் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

நன்னிலம் வட்டம், கோட்டூர் கிராமத்தில் புத்தாற்றின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்.

298—(*வினா எண் 7989) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் வட்டம், கோட்டூர் கிராமத்தில், புத்தாற்றின் குறுக்கே படுக்கை அணை (Bed Dam) ஒன்று கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.